**இராமநாதபுரம் நகராட்சி**

இராமநாதபுரம் நகராட்சியில் 2020 டிசம்பர் மாதத்திற்கான நகர் மன்ற சாதாரண கூட்டம் 31.12.2020–ந் தேதி காலை 10.55 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்:-

| | | |
|---|---|---|
| பொருள் எண்..1 | இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர்(பொ) டிசம்பர் 2020–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம். | **தீர்மானம் எண்.1282**<br>**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டன.** |
| பொருள் எண்..2 | இராமநாதபுரம் நகராட்சி பொறியாளர் டிசம்பர் 2020–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம். | **தீர்மானம் எண்.1283**<br>**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டன.** |
| பொருள் எண்..3 | 211 இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதி வருகின்ற பாராளுமன்ற தேர்தல் சட்டமன்ற தேர்தல் மற்றும் உள்ளாட்சி தேர்தல் இவைகளை எதிர்நோக்கி தற்போது தேர்தல் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. மாவட்ட ஆட்சியாளர் அறிவுரைகளின்படி சிறப்பு சுருக்க திருத்தம் (Special Camp)-ல் பெறப்பட்டுள்ள படிவங்கள் (6,7,8,8A)சேர்த்தல், நீக்கல், திருத்தம், முகவரி மாற்றம் ஆகியவைகளை கணிணியில் பதிவேற்றம் செய்யவும் தேர்தல் தொடர்பான மின்னஞ்சல் செய்திகளுக்கு உடனுக்குடன் பதிலறிக்கை அனுப்பிடவும் தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி மாவட்ட ஆட்சியரின் தரவிலை விகிதப்படி தினக்கூலி அடிப்படையில் இரண்டு பணியாளர்களை நியமனம் செய்யவும் உத்தேச செலவினம் பொது நிதியில் இருந்து வழங்கவும் அனுமதி வேண்டி மன்ற பொருள் வேண்டப்படுகிறது. மாவட்ட ஆட்சியரின் உத்திரவு 2020–2021ன் | **தீர்மானம் எண்.1284**<br>**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டன** |

<table>
<tr>
<td></td>
<td>படி 89 நாட்களுக்கு 2 பணியாளர்கள் ஊதியம் ரூ.92,560/– உத்தேச செலவினம் வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு–</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>கோப்பு எண்.3915/எப்1/2018</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..4</td>
<td>இராமநாதபுரம் நகராட்சி, வருவாய் நிதி 2020–2021, வார்டு எண்–22 கீரைக்கார ஊரணி கிழக்கு தெருவில் புதிதாக கட்டப்பட்டுள்ள நவீன மீன் அங்காடி கட்டிடத்தினை சுற்றி வளாகத்திற்குள் பேவர் பிளாக் (Paver Block) தளம் அமைக்கம் பணிக்கு ரூ.11.00 லட்சம் மதிப்பீட்டிற்கு 07.12.2020–ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.<br><br>
<table>
<tr><th>வ.எண்.</th><th>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள்</th><th>மதிப்பீட்டு தொகை (ரூ) (இலட்சத்தில்)</th><th>ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள தொகை (ரூ)</th><th>ஒப்பந்ததாரர்களால் வழங்கியுள்ள விலை விகிதம் (GST உள்பட) கூடுதல்/குறைவு (ரூ)</th></tr>
<tr><td>1.</td><td>M/s.Jeevanantham Construction,<br>No-4, Aranmanai Ramasamy Kothanar West Street,<br>Ramanathapuram.</td><td>1<br>1,00,000/–</td><td>11,47,941/–</td><td>4.96 %<br>சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
<tr><td>2.</td><td>திரு.என்.ஜீவானந்தம்<br>ஒப்பந்ததாரர்,<br>எண்.19/B, மறவர் தெரு,<br>இராமநாதபுரம்</td><td>11,00,000/–</td><td>11,75,224/–</td><td>7.48 %<br>சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
</td>
<td>தீர்மானம் எண்.1285<br><br>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டன.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிதாரர்களில் கூடுதலில் விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்தபுள்ளிதாரர் "M/s.Jeevanantham Construction No-4, Aranmanai Ramasamy Kothanar West Street, Ramanathapuram. அவர்களது **4.96%** சதவிகிதம் மதிப்பீட்டை விட கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு– 1.</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** தமிழ்நாடு நகராட்சி பொறியாளர் கையேடு (Engineering Manual) பிரிவு **2:71–ல்** பணியின் முக்கியத்துவம் மற்றும் பணியின் தன்மை அடிப்படையில் முதல் அழைப்பிலேயே (First Call) மதிப்பீட்டை விட **5%** சதவிகிதம் வரை கூடுதலினை மன்றமே அனுமதிக்கலாம் என உள்ளது. அதன்படி மன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br>**3.** மதிப்பீட்டு தொகையை விட ஒப்பந்ததாரர் கோரியுள்ள கூடுதல் ஒப்பந்தத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.**3360/2020/**இ**1** | |
| பொருள் எண்..5 | இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம் **2020–21**, வார்டு எண்–**8**, மகர்நோன்பு பொட்டல் அருகில் உள்ள (யாபா மஹால்) காம்பவுண்டில் புதிய பாதாள சாக்கடை குழாய் பதிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.**2.80** லட்சத்திற்கு பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ள நகர்மன்ற அனுமதிக்கு வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>– 1)**மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)**இப்பணி பாதாள சாக்கடை பணி என்பதினால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளரின் முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>ந.க.எண்.**3642/2020/**இ**1** | **தீர்மானம் எண்.1286**<br>**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டன.** |

| | | |
|---|---|---|
| பொருள் எண்..6 | இராமநாதபுரம் நகராட்சி, பொறியியல் பிரிவில் இயங்கி வரும் பாதாள சாக்கடை Jed Rodding வாகனம் TN-65-Q- 5536–க்கு தகுதி சான்று முடிவுற்றதால் மேற்படி 2020–21–ஆம் ஆண்டிற்கான தகுதி சான்று பெற பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.6.80 லட்சத்திற்கு பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் பணிமேற்கொள்ள நகர்மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>– 1)**மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)இப்பணி பாதாள சாக்கடை பணி என்பதினால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளரின் முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>ந.க.எண்.3643/2020/இ1 | **தீர்மானம் எண்.1287**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |
| பொருள் எண்..7 | இராமநாதபுரம் நகராட்சிக்கு பாத்தியமான பாண்டிக்கண்மாய் கட்டணக் கழிப்பறை மற்றும் குளியலறை டோக்கன்கள் சன்பிரிண்டர்ஸ், இராமநாதபுரம் நிறுவனத்திலிருந்து அச்சடித்து பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.24,800/–யை திரு.ஜோசப் ஜெயராஜ், சன் பிரிண்டர்ஸ் என்பவருக்கு வழங்க மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு– 1)**மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)பட்டியல் தொகை ரூ.24,800/– திரு.ஜோசப் ஜெயராஜ் என்பவருக்கு வழங்க அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.1288**<br>**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டன.** |
| பொருள் எண்..8 | **<u>பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 01.04.2021 முதல் 31.03.2024 (மூன்றாண்டு தொகுப்பு)</u>**<br>1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 328வது பிரிவின்படியும் 04.04.1938ம் தேதியில் உள்ளாட்சிதுறை அரசு ஆணை எண்.1216 மற்றும் 22.07.1971ம் தேதி உள்ளாட்சி துறை அரசாணை எண்.1915 விதி 3 (4 மற்றும் அரசாணை நிலை எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நிதி 4) துறை நாள் 19.09.2008–ன் படி ஏல அறிவிப்பின் | **தீர்மானம் எண்.1289**<br>**அலுவலகக் குறிப்புகள் ஏற்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளின்படி இராமநாதபுரம் நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலர்களால் கீழே பட்டியலில் கண்டுள்ள நகராட்சிக்குச் சொந்தமான உரிமை இனங்களை 01.04.2021 முதல் 31.03.2024 முடிய மூன்றாண்டு கால தொகுப்பாக அனுபவித்துக் கொள்ளும் உரிமையை 2021ம் ஆண்டு ஜனவரி மாதம் 20.01.2021ம் தேதி<br>புதன் கிழமை காலை 11.30மணிக்கு நகராட்சி அலுவலக கட்டிடத்தில் எல்லோரும் அறிய பகிரங்கமாக ஏலம் விடப்படும். மேலும் மேற்கண்ட இனங்களுக்கு மேற்படி நாளன்று காலை 11.00 மணி வரை ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும். குறிப்பிட்ட நாளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்த முடியாமல் பாக்கி உள்ள இனங்கள் இருந்தாலும் அல்லது குறிப்பிட்ட நாளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்த முடியாமல் போனாலும் அவைகள் ஒத்தி வைக்கப்பட்டு அறிவிக்கப்படும் வேறு தேதியில் ஏலம் மற்றும் ஒப்பந்பந்தப்புள்ளி நடத்தப்படும். ஒத்தி வைக்கப்படும் தேதி அவ்வப்போது விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரம் செய்யப்படும். ஒவ்வொரு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி இறுதி முடிவு மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும்.<br>ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்கள் ஒவ்வொரு இனத்திற்கும் பட்டியலில் கண்டுள்ள விபரப்படி செலுத்தப்பட வேண்டிய காப்புத் தொகை மற்றும் கூடுதல் காப்புத்தொகையினை ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக 19.01.2021ம் தேதி செவ்வாய் கிழமை மாலை 3.30 மணிக்குள் நகராட்சி அலுவலகத்தில் வங்கி வரைவோலையாக செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். இதில் குறிப்பிட்டுள்ள தேதிக்குள் வங்கி வரைவோலையாக செலுத்தி ரசீது பெற்றவர்கள் மட்டும் 20.01.2021 அன்று நடைபெறவிருக்கும் ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் கோரும் தினத்தன்று ஏலக்காப்புத் தொகையினை ரொக்கமாக செலுத்த கண்டிப்பாக அனுமதிக்கப்படமாட்டாது. காப்புத்தொகை மற்றும் கூடுதல் காப்புத்தொகை தனித்தனியாக ஒவ்வொரு இனத்திற்கும் செலுத்தப்பட வேண்டும். ஒரு இனத்திற்கு செலுத்தப்பட்ட காப்புத்தொகையினை வேறு இனத்திற்கு மாற்றம் செய்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்கவோ, ஏலம் கோரவோ அனுமதிக்கப்படமாட்டாது. | |

| | | |
|---|---|---|
| | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பொது ஏலம் முடிந்தவுடன் திறக்கப்பட்டு பொது ஏலத் தொகையும் டெண்டர் தொகையும் சரி பார்க்கப்பட்டு எது அதிகபட்ச தொகையோ அதனை உறுதி தொகையாக எடுத்துக்கொள்ளப்படும். காப்புத் தொகை மற்றும் கூடுதல் காப்புத் தொகை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் **19.01.2021** அன்று வங்கி வரைவோலை கொடுக்கும் போது (Pan Card) வருமான வரித் துறையினரால் வழங்கப்படும் நிரந்தர கணக்கு எண் ஜெராக்ஸ், ரேஷன் கார்டு ஜெராக்ஸ் மற்றும் முகவரி ஆதாரத்திற்கான ஜெராக்ஸ் நகலுடன் விண்ணப்பிக்கும் விண்ணப்பங்களுக்கு மட்டுமே நகராட்சியால் ஏற்றுக்கொள்ளப்படும்.<br>மேலும் ஒப்பந்தப்புள்ளி எந்த இனத்திற்கு என்று உறையில் தெளிவாக குறிப்பிட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் உயர்ந்தபட்ச கேள்வி கேட்பவர்களின் காப்புத்தொகையை தவிர மற்றவர்களின் காப்புத் தொகை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி முடிந்த ஏழு தினங்களில் காசோலை மூலம் திருப்பித் தரப்படும்.<br>ஏலப்பொறுப்பு தொகை மற்றும் கூடுதல் பொறுப்பு தொகை ஏலத் தொகையில் / ஒப்பந்தப்புள்ளி தொகையில் ஈடு செய்யப்பட மாட்டாது ஏலதாரர் பெயரிலேயே வைப்புத் தொகையாக வைக்கப்படும் அனுபவ உரிம காலம் முடிந்த பின்பே மேற்படி உரிம இனத்தில் ஏதாவது இழப்பு ஏற்பட்டிருப்பின் அதற்கான ஈவு தொகை நகராட்சியின் மூலம் பிடித்தம் செய்த பின்னர் மேற்படி உரிம இனத்திற்குரிய ஏல வைப்புத் தொகை / ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையில் மீதத் தொகை மட்டுமே திரும்ப வழங்கப்படும்.<br><br>மேலும் ஒவ்வொரு ஆண்டு உரிமம் காலம் முடியும் காலத்திற்கு மூன்று மாதங்களுக்கு முன்பாக அதாவது டிசம்பர் மாதத்தில் ஏலத்தொகை / ஒப்பந்தப்புள்ளி தொகையில் 5 சதவீதம் கூடுதலாக்கி அதற்கான வருமானவரி சேர்த்து செலுத்தி புதுப்பிப்பதற்கான சம்மதக் கடிதம் நகராட்சி ஆணையர் பெயருக்கு வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப்படாத நிலையில் சம்மந்தப்பட்ட உரிம இனங்கள் மறு ஏலத்திற்கு கொண்டு வரப்படும் என மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது. | |

**01.04.2021 முதல் அல்லது ஒப்புவிக்கும் நாள் முதல் 31.03.2024 முடிய உள்ள காலத்திற்கு அனுபவித்து கொள்ளும் உரிமை**

| வ. எண் | குத்தகை விபரம் | ஏலக்கேள்வி காப்பு தொகை (ரூபாய்) | கூடுதல் காப்புத்தொகை (ரூபாய்) | மின்கட்டண காப்புத்தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1. | வாரச்சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமை | 10,00,000/- | 10,00,000/- | - |
| 2. | நகராட்சி ஆடு அடிக்கும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமை | 50,000/- | 50,000/- | 2,000/- |
| 3. | அக்ரஹாரம் சாலையில் உள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமை | 2,00,000/- | 1,00,000/- | 2,000/- |
| 4. | புதிய பேருந்து நிலையத்தில் உள்ள இரு சக்கர வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமை | 7,00,000/- | 5,00,000/- | 2,000/- |
| 5. | நகராட்சி மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகத்தில் உள்ள தென்னை மரங்களின் மேற்பலனை அனுபவித்து கொள்ளும் உரிமை | 2,000/- | 2,000/- | - |
| 6. | நகராட்சி புதிய மற்றும் பழைய பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளின் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமை | 7,00,000/- | 5,00,000/- | - |
| 7. | நகராட்சியில் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறை மற்றும் குளியலறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமை | 5,00,000/- | 10,00,000/- | 2,000/- |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு: 1)</u>**மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>2)மன்றம் அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதிக்கலாம். | |
| பொருள் எண்..9 | ாமநாதபுரம் நகராட்சி, வடகிழக்கு பருவ மழை 2020 இந்நகர் பகுதியில் அனைத்து வார்டுகளிலும் வடகிழக்கு பருவமழையினால் தமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6.00 லட்சத்திற்கு வருவாய் நிதியின் கீழ் ரிமேற்கொள்ள நகர்மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>வலக குறிப்பு: 1)</u>**மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>2)இப்பணி பொதுமக்களின் பயன்பாட்டிற்கான அவசர அவசிய பணி என்பதினால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் முன்ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>ந.க.எண்.3645/2020/இ1 | **தீர்மானம் எண்.1290**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டன.** |
| பொருள் எண்..10 | இராமநாதபுரம் நகராட்சி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி (2021–2024) 01.04.2021 முதல் 31.03.2024 வரை (மூன்றாண்டு தொகுப்பு) நகர் மன்ற தீர்மான எண்.1254, நாள்.30.09.2020–ன்படி நவீன மீன் விற்பனைக் கூடம் (56 கடைகள்) உள்ளடக்கிய தொகுப்பு உரிமத்திற்கு 23.12.2020–ல் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஏலக்கேள்வி வரப்பெற்றுள்ளது. | **தீர்மானம் எண்.1291**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.** |

| ஏலதாரர் பெயர் (ம) முகவரி | ஏலக்கேள்வி காப்புத் தொகை (ரூ) | ஒப்பந்தப்புள்ளி காப்புத் தொகை (ரூ) |
|---|---|---|

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1)திரு.ஆ.பாலமுருகன்<br>த/பெ.எஸ்.ஆறுமுகத் தேவர்,<br>154, வண்டிக்காரத் தெரு,<br>இராமநாதபுரம். | 25,33,000/– | இல்லை | | |
| | | 2)திரு.சுரேஷ்யாதவ்<br>17, நாராயணசாமி தெரு,<br>எக்மோர்,<br>சென்னை. | 25,31,000/– | இல்லை | | |
| | | 3)திரு.ரா.வேல்முருகன்,<br>த/பெ.ராஜமாணிக்கம்<br>கொல்லம்பட்டரைத் தெரு,<br>இராமநாதபுரம். | 25,35,000/– | இல்லை | | |
| | | 4)திரு.எம்.சசிக்குமார்,<br>339, வண்டிக்காரத் தெரு,<br>இராமநாதபுரம். | 25,37,000/– | இல்லை | | |
| | | 5)திரு.கி.கேசவன்,<br>த/பெ.கிருஷ்ணசாமி,<br>பசும்பொன் நகர்,<br>இராமநாதபுரம். | 25,34,000/– | இல்லை | | |
| | | 6)திரு.சி.முருகேசன்,<br>315, வண்டிக்காரத் தெரு,<br>இராமநாதபுரம். | – | இல்லை | | |
| | | 7)திரு.கே.இராமர்,<br>1/170, எம்.எஸ்.கே.நகர்,<br>இராமநாதபுரம். | 25,36,000/– | இல்லை | | |
| | | 8)திரு.எம்.பாலசுப்பிரமணியன்<br>த/பெ.முனியசாமி,<br>எம்.எஸ்.கே.நகர், | 25,32,000/– | இல்லை | | |

| | | |
|---|---|---|
| | இராமநாதபுரம்.<br><br>மேற்காணும் விபரப்படியான இனத்தை ஏலம் விடப்பட்டதில் வரிசை எண்.4ல் உள்ள நபர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.25,37,000/—ஐ திரு.மு.சசிக்குமார் கூடுதலான ஏலக்கேள்வி கேட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**—1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்காணும் விபரப்படி அதிகபட்சமான ஏலக்கேள்வி கோரியுள்ள திரு.மு.சசிக்குமார் என்பவரது ஏலக்கேள்வியை மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| பொருள் எண்..11 | இராமநாதபுரம் நகராட்சிக்கு பாத்தியமான நவீன மீன் விற்பனைக் கூடம் 56 கடைகள் உள்ளடக்கிய தொகுப்பு உரிமம் 2021—2024 மூன்றாண்டு தொகுப்பு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் தினகரன் நாளிதழில் விளம்பரம் செய்த தொகை ரூ.18,827/— வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**— மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.1292**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.** |
| பொருள் எண்..12 | இராமநாதபுரம் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணிணிகள், பிரிண்டர், மோடம் மற்றும் நெட்வொர்க் ஆகியவை பழுதாகி உள்ளதற்கு பழுது நீக்கம் அகற்றி இயக்கி கொடுக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.15,000/—த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**— மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3761/2020/இ1 | **தீர்மானம் எண்.1293**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.** |

<table>
<tr><td></td><td></td><td></td></tr>
<tr><td>பொருள் எண்..13</td><td>இந்நகராட்சி குடிநீர் பராமரிப்பு பிரிவில் பணியாற்றி வரும் கீழ்க்கண்ட பணியாளர்கள் தொழிலாளர்கள் நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.<br><br>1 | C.P.No.130/13 | திரு.எஸ்.பொன்மொழி<br>2 | C.P.No.131/13 | திரு.கே.முனிஸ்வரன்<br>3 | C.P.No.132/13 | திரு.எஸ்.ரபிபுல்லாகான்<br>4 | C.P.No.133/13 | திரு.எம்.செல்வம்<br>5 | C.P.No.134/13 | திரு.கே.மாயழகு<br>6 | C.P.No.135/13 | திரு.எஸ்.பூபதி<br>7 | C.P.No.136/13 | திரு.வி.சங்கரன்<br>8 | C.P.No.22/14 | திரு.எம்.சந்திரசேகர்<br><br>மேற்கண்ட பணியாளர்கள் தொடரப்பட்ட வழக்கு 27.11.2020–ன் தள்ளுபடி செய்யப்பட்டபடியால் வழக்கு கட்டணமாக ரூ.15000/– வழங்க கோரி நகர்மன்ற வழக்கறிஞர் கொடுத்துள்ள பட்டியலின்படி தொகையினை நகர்மன்ற வழக்கறிஞர் திரு.ஏ.கண்ணன் அவர்களுக்கு வழங்க மன்றம் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u>– மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மானம் எண்.1294<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண்..14</td><td>இராமநாதபுரம் நகராட்சி, பொறியியல் பிரிவில் இயங்கி வரும் பாதாள சாக்கடை அடைப்பு எடுக்கும் வாகனம் Jed Rodding எண்.TN65-Q-5536–க்கு தகுதி சான்று பெறுவதற்கு பழுது நீக்கம் பணிமேற்கொள்ள ரூ.6.80/–</td><td>தீர்மானம் எண்.1295<br>அலுவலகக் குறிப்பு</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
லட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி 31.12.2020–ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.
<table>
<tr><th>வ.எண்.</th><th>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள்</th><th>மதிப்பீட்டு தொகை (ரூ) (இலட்சத்தில்)</th><th>வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ)</th></tr>
<tr><td>1.</td><td>M/s.Lakshmi Auto Diesel Works,<br>Workshop Corner,<br>Salem Main Road,<br>Mettur Dam-636 401.</td><td>6,80,000/–</td><td>0.10 % சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/s.Sri Jothimurugan Motor Works,<br>Sankar Nagar,<br>Salem- 636 007.</td><td>6,80,000/–</td><td>1.10 % சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிதாரர்களில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்தபுள்ளிதாரா் “M/s.Lakshmi Auto Diesel Works, Workshop Corner, Salem Main Road, Mettur Dam-636 401 அவா்களது 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்று மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு–</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.3643/2020/இ1
</td>
<td>ஏற்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..15</td>
<td>இராமநாதபுரம் நகராட்சி, வருவாய் நிதி 2020–2021 அனைத்து வாா் டு களிலும் வடகிழக்கு பருவமழையினால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணிக்கு ரூ.6.00 லட்சம் மதிப்பீட்டிற்கு 30.12.2020–ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.</td>
<td>தீா்மானம் எண்.1296<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | <table><tr><th>வ.எண்.</th><th>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள்</th><th>மதிப்பீட்டு தொகை (ரூ) (இலட்சத்தில்)</th><th>வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ)</th></tr><tr><td>1.</td><td>திரு.என்.ஜீவானந்தம்<br>ஒப்பந்ததாரர்,<br>எண்–19–பி, மறவர் தெரு,<br>இராமநாதபுரம்.</td><td>6,00,000/–</td><td>1.10 % சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்</td></tr><tr><td>2.</td><td>M/s.Jeevanatham Construction.<br>No-4, Aranmanai Ramanasamy Kothanar West Street,<br>Ramanathapuram.</td><td>6,00,000/–</td><td>0.10 % சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு</td></tr></table><br>மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்தபுள்ளிதாரர் “M/s.Jeevanatham Construction, No-4, Aranmanai Ramanasamy Kothanar West Street, Ramanathapuram,அவர்களது 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு–</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3645/2020/இ1 | |
| பொருள் எண்..16 | இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம் 2020–2021 வார்டு எண்–8, மகர்நோன்பு பொட்டல் அருகில் உள்ள (யாபா மஹால்) காம்பவுண்டில் புதிய பாதாள சாக்கடை குழாய் பதிக்கும் பணிக்கு ரூ.2.80 லட்சம் மதிப்பீட்டில் 30.12.2020–ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.<br><table><tr><th></th><th>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின்</th><th>மதிப்பீட்டு தொகை</th><th>வழங்கியுள்ள விலை விகிதம்</th></tr></table> | **தீர்மானம் எண்.1297**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.** |

<table>
<tr><td></td><td>

| வ.எண். | பெயர்கள் | (ரூ) (இலட்சத்தில்) | கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1. | M/s.Jeevanatham Construction. No-4, Aranmanai Ramanasamy Kothanar West Street, Ramanathapuram. | 2,80,000/- | 0.10 % சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.என்.ஜீவானந்தம் ஒப்பந்ததாரர், எண்–19–பி, மறவர் தெரு, இராமநாதபுரம். | 2,80,000/- | 1.10 % சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிதாரர்களில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்தபுள்ளிதாரர் "M/s.Jeevanatham Construction, No-4, Aranmanai Ramanasamy Kothanar West Street, Ramanathapuram அவர்களது 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u> மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3642/2020/இ1
</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்..17</td><td>இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் குப்பை அள்ளும் வாகனம் TN65-AJ–6580–ன் நான்கு டயர்களும் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், புதியதாக டயர்கள் மாற்றித் தர உத்தேச செலவினம் ரூ.12,500/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு</u>– 1)மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2)பொது சுகாதார நலன் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டு குறைந்த விலைப்புள்ளி</td><td>தீர்மானம் எண்.1298<br><br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | கொடுத்துள்ள "ஸ்ரீமுருகன் டயர்ஸ், இராமநாதபுரத்தின் விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டு, பணி உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.3454/2020/எச்1 | |
| பொருள் எண்..18 | இராமநாதபுரம் நகராட்சி, அவசர அவசியம் கருதி, சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920, நகராட்சிகளின் சட்டம் 1920, நகராட்சிகளின் சட்ட விதி 15ன் கீழ் 01.12.2020 முதல் 31.12.2020 வரையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்ட வகையில் கீழ்க்கண்டவாறாக செலவினம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது. | **தீர்மானம் எண்.1299**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 1. | இராமநாதபுரம் நகராட்சி, அலுவலக பயன்பாட்டில் உள்ள Canon Image Class MF 211 ndw Printer-1 எண்ணம் பழுது நீக்கம் பணி மற்றும் Operating System Installation. Network Connection Service மற்றும் Keyboard and Mouse 1–எண்ணம் விநியோகம் செய்யும் பணி முடிவுற்றமைக்கு பட்டியல் தொகை வழங்கியே முறையே | ரூ.7,350/– |
| 2. | இராமநாதபுரம் நகராட்சி, கணிணி பிரிவில் உள்ள UPS மற்றும் Battery HIPOWER 150 amp Battery Service and LOG Charging –12 எண்ணம் மற்றும் 5KV online UPS IGGT Driver Board Service 1-எண்ணம் பழுதுநீக்கம் பணி முடிவுற்றமைக்கு பட்டியல் தொகை வழங்கியே முறையே | ரூ.24,750/– |
| 3. | இராமநாதபுரம் நகராட்சி, கணிணி பிரிவில் இயங்கி வரும் ஜெராக்ஸ் மிஷின், Richo Gesterner Mp 2001-L பழுதுநீக்கம் | |

| | | | |
|---|---|---|---|
| | | பணிமேற்கொள்ளப்பட்டு முடிவுற்றமைக்கு பட்டியல் தொகை வழங்கியே முறையே | ரூ.13,756/– |
| | 4. | இராமநாதபுரம் நகராட்சி, வடகிழக்கு பருவமழை–2020, குடிநீர் நிதி 2020–2021 நகர் பகுதிகளான 9 இடங்களில் மழைநீர் தேங்குவதை வெளியேற்றுவதற்கு ஆயில் என்ஜின் மூலம் 7.5HP டீசல் என்ஜின் மற்றும் 10HP டீசல் என்ஜின் வாடகைக்கு எடுத்து அமர்த்தி பணிமுடிவுற்றமைக்கு பட்டியல் தொகை வழங்கியே முறையே | ரூ.2,98,962/– |
| | 5. | இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் நிதி 2020–21, வடகிழக்கு பருவமழை 2020, நகர் பகுதியில் தாழ்வான பகுதியில் தேங்கும் மழைநீரினை அகற்றுதல், ஊரணிகளில் வரும் வரத்து கால்வாயினை சுத்தப்படுத்துதல், ஊரணிகளில் உள்ள கருவேல மரங்கள் மற்றும் புட்புதர்களை அகற்றிதல் ஆகிய பணிமேற்கொள்ள தனியார் JCB இயந்திரம் வாடகைக்கு எடுத்தி அமர்த்தி கொடுக்கும் பணி முடிவுற்றமைக்கு பட்டியல் தொகை வழங்கியே முறையே | ரூ.2,00,000/– |

**அலுவலக குறிப்பு**– தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920, விதி எண்–15ன் கீழ் மேற்கண்டவாறு, மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் பதிவேடு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண்.877/2016/இ1

| | | |
|---|---|---|
| பொருள் எண்..19 | இராமநாதபுரம் நகராட்சி வார்டு–எப், பிளாக்–15, நகரளவு எண்105, இரயில்வே பீடர் சாலையில் வாடகை கார் ஓட்டுனர்கள் வாடகை கார் நிறுத்தம் இரும்பு கூரையில் அமைத்துள்ளதை அகற்ற கோரி திரு.சிராஜீதீன் என்பவர் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு எண்.WP(MD) No.17859/2019–ல் வழக்கினை நடத்திடவும் எதிர்வாதுரை தயார் செய்திடவும் வழக்கு கட்டணம் ரூ.15,000/– வழக்குரைஞர் திரு.ஏ.கண்ணன் அவர்களுக்கு வழங்க அனுமதி வேண்டி மன்ற பொருள் வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**– மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2131/2019/எப்1 | **தீர்மானம் எண்.1300**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.** |
| பொருள் எண்..20 | இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட வாரசந்தை சாலையில் உள்ள வார்டு–எப், பிளாக்–4, நகரளவு எண்19/1–ல் தாவா இடம் தொடர்பாக திரு.எம்.ஏ.காதர் மற்றும் மூன்று நபர்கள் காலியிடம் தொடர்பாக வழக்கு எண்.CMP(MD)NO.542/2020, SA(MD)No.424/2020 AS No.25/2013 Sub court இராமநாதபுரம் மேல் முறையீடு மனு வழக்கு தொடர்பாக ஆஜராகி வழக்கினை நடத்திடவும் வழக்கு தாக்கல் செய்ய உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.ஏ.கண்ணன் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.15,000/– வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**– மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3654/2005/எப்1 | **தீர்மானம் எண்.1301**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.** |
| பொருள் எண்..21 | புரட்சித் தலைவி அம்மா ஒருங்கிணைந்த விபத்து கால காப்பீடு திட்டத்தின் கீழ் நகராட்சிப் பகுதியில் வசிக்கின்ற வறுமைக் கோட்டின் (BPL) கீழ் உள்ள குடும்பங்களுக்கு காப்பீட்டு நன்மையை மேம்படுத்துதல் தொடர்பாக, கூடுதல் விபரங்களை சேகரிக்கும் பொருட்டு, படிவங்களை பிரதியெடுத்து சர்வே செய்யப்பட்ட படிவங்களை இணையதளத்தில் கூடுதல் | **தீர்மானம் எண்.1302**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | விபரங்களுடன் பதிவேற்றம் செய்யும் பொருட்டு, ஒரு படிவத்திற்கு ரூ.15/– வீதம் செலவுகள் மேற்கொள்ளுமாறு, அரசாணை (நிலை எண்.170(ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி (மஅதி–3)துறை, நாள்.27.10.2020 தெரிவிக்கப்பட்டுள்து. அதனடிப்படையில் இராமநாதபுரம் நகராட்சிக்கான (BPL) வறுமை கோட்டின் கீழ் உள்ள 7498 குடும்பங்களுக்கு செலவுத் தொகை ரூ.1.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு–</u> 1)**மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)அரசு தொடர்பான பணியாதலால் அவசர அவசியம் கருதி, பிரிண்ட் எடுத்துள்ள வகைக்கு, இராமநாதபுரம் சவரி ஆப்செட் பிரிண்டர்ஸ் நிறுவனத்திற்கும், பதிவேற்றம் செய்த வகைக்கு, கணிணி உதவியாளர்களுக்கு (தற்காலிகம்) தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2384/2020/எச்1 | |
| பொருள் எண்..22 | இராமநாதபுரம் நகராட்சி, வார்டு எண்–18, வள்ளல் பாரி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் Smart Class அமைத்தல், மற்றும் Table Chair வாங்கி கொடுக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.16.00 லட்சத்திற்கு கல்விநிதி 2020–21ன் கீழ் பணிமேற்கொள்ள நகர்மன்ற நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>– 1)**மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)இப்பணி கல்விநிதி பணியாதலால் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோருவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>ந.க.எண்.3691/2020/எச்1 | **தீர்மானம் எண்.1303**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| பொருள் எண்..23 | இராமநாதபுரம் நகராட்சி வார்டு எண்–6, அல்லிக்கண்மாய் மயானத்தில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகன மேடையை பராமரிப்பு பணிமேற்கொள்ள "M/s.Sri Sakthi Foundation, தொண்டு நிறுவனம்–NGO, எண்–240, வண்டிக்காரத் தெரு, இராமநாதபுரம் அவர்களுக்கு ந.க.எண்.5766/2012/இ1, நாள்.22.06.2016–ன்படி பராமரிப்பு பணிக்கு அனுமதி அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட நிறுவனம் தற்போது வரையிலும் பராமரிப்பு பணியினை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>மேற்காணும் நிறுவனம் பராமரிப்பு பணியினை தொடர்ந்து செயல்பாட்டுக்கு மேற்கொள்ளும் விதத்தில், பராமரிப்பு பணி செய்வதற்கு எரிபொருள் தட்டுப்பாடு உயர்வு, சிறு சிறு பராமரிப்பு செலவு அடிக்கடி ஏற்படுகின்றது. எனவே பராமரிப்பு செலவு கூடுதலாக ஏற்படுவதினை பொருட்டு 01.01.2021 முதல் எரியூட்டு ஒன்றிற்கு ரூ.2,500/–மட்டும் பெற்று அதில் ரூ.300/–ஐ நகராட்சியில் செலுத்தி பராமரிப்பு பணியினை நடத்தி கொள்ள அனுமதி வேண்டி மேற்கண்ட நிறுவனத்தின் விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது.<br>எனவே மேற்கண்ட விண்ணப்பத்தினை பரிசீலித்து எரியூட்டு ஒன்றிற்கு ரூ.300/– வீதம் ஒவ்வொரு மாதமும் நகராட்சி அலுவலகத்தில் செலுத்தி மேற்கண்ட நவீன எரிவாயு தகனமேடை பராமரிப்பு பணிமேற்கொள்ள 08.01.2021 முதல் 07.01.2024 வரையிலான 3 வருடத்திற்கு பராமரிக்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு–</u> 1)**மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)நவீன எரிவாயு தகனமேடை பராமரிப்பு பணியினை கொள்ள "M/s.Sri Sakthi Foundation, தொண்டு நிறுவனம்–NGO, எண்–240, வண்டிக்காரத் தெரு, இராமநாதபுரம் அவர்களுக்கு 08.01.2021 முதல் 07.01.2024 வரையிலான காலத்திற்கு பராமரிக்க மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.3667/2020/இ1 | **தீர்மானம் எண்.1304**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.** |
| பொருள் எண்..24 | இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம் 2020–2021, இந்திரா நகர் கழிவு நீரேற்று நிலையத்தியிலிருந்து கழுகூரணி சுத்திகரிப்பு நிலையத்திற்கு செல்லும் பிரதான கழிவுநீர் உந்து குழாய் காட்டூரணி அருகில் பழுதாகி உள்ளதை புதிய | **தீர்மானம் எண்.1305**<br>**அலுவலகக் குறிப்பு** |

பிரதான குழாயாக மாற்றி அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.25.00 லட்சத்திற்கு 10.12.2020–ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளிதாரார்கள் முன்னிலையில் விலைவிகித ஒப்பந்தத்தினை திறக்கப்பட்டு ஒப்பு நோக்கியதில் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. பின்வருமாறு

| வ.எண். | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள் | மதிப்பீட்டு தொகை (ரூ) (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள தொகை (ரூ) | வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|---|
| 1. | M/s.VIJAY SAKTHI ENGINEERING, No-36,kakkathoppu, West Masi Street, Madurai-625 001. | 25,00,000/– | 25,45,675/– | 4.90 % சதவிகிதம் மதிப்பீட்டை காட்டிலும் அதிகம் |
| 2. | Mrs.S.Radha, Engineering Contractor, No-240, Jeeva Naga 1st Street, Madurai– 625 011. | 25,00,000/– | 25,72,324/– | 6.00 % சதவிகிதம் மதிப்பீட்டை விட காட்டிலும் அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விகிதத்தில் மதிப்பீட்டினை காட்டிலும் 4.90% சதவிகிதம் கூடுதலில் குறைவினை ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் "M/s.VIJAY SAKTHI ENGINEERING,. No-36, KAKKATHOPPU. WEST MASI STREET, MADURAI-625 001 அவர்களது மதிப்பீட்டு விலைக்கு ஒப்பந்தப்புள்ளியினை மேலும் குறைத்து தரக்கோரி சம்மத கடிதம் (Consent Letter) அளிக்க கோரியதில் மேற்படி ஒப்பந்ததாரர் 15.12.2020–ம் தேதிய சம்மத கடிதத்தில் மதிப்பீட்டினைக் காட்டிலும் 4.50 உயர்வு சதவீதத்தில் மட்டுமே பணி செய்து தர இயலும் என கடிதம் அளித்துள்ளார். அதன் அடிப்படையில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் பார்வைக்கும், முடிவுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**ஏற்கப்பட்டது.**

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு</u> 1)**மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)**தமிழ்நாடு நகராட்சி பொறியாளர் கையேடு (Engineering Manual) பிரிவு **2:7:1–**ல் பணியின் முக்கியத்துவம் மற்றும் பணியின் தன்மை அடிப்படையில் முதல் அழைப்பிலேயே (First Call) மதிப்பீட்டை விட **5%** சதவிகிதம் வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளியினை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம் என உள்ளது.<br>**3)** மேலும் இப்பணி பாதாள சாக்கடை திட்ட பணி என்பதினால் மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும் மதிப்பீட்டு உயர்வு சதவிகிதம் நகர்மன்ற தனி அலுவலரின் அதிகார வரம்பிற்குட்பட்டு வருவதாலும், தமிழ்நாடு நகராட்சிகள் பொறியாளர் கையேடு விதிமுறை **2:7:2–**ன் படியும் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று பணி உத்திரவு வழங்குவதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**4)**மதிப்பீட்டு தொகையைவிட ஒப்பந்ததாரர் கோரியுள்ள கூடுதல் ஒப்பந்த தொகையினை பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.**3366/2020/**இ**1** | |
| பொருள் எண்..25 | இராமநாதபுரம் நகராட்சி, நகர் எல்லைக்குட்பட்ட காட்டு பிள்ளையார் கோவில் தெரு (வார்டு –8), மதுரையார் தெரு(வார்டு–9), மோர்கடைத் தெரு(வார்டு–13), முத்துராமலிங்கசாமிகோவில் தெரு(வார்டு–12), புளிக்காரத் தெரு (வார்டு–21) ஆகிய இடங்களில் புதியதாக பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.80 லட்சத்திற்கு குடிநீர் நிதியின் கீழ் பணிமேற்கொள்ள நகர்மன்ற நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** –1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.**இப்பணி அவசர அவசிய பணிஎன்பதினால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் | **தீர்மானம் எண்.1306**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோருவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>ந.க.எண்.3678/2020/இ1 | |
| பொருள் எண்..26 | இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம் இயக்குதலும், பேணுதலும் பராமரிப்பு பணிக்கு “M/s.TamilNadu Water Supply Drainage System, No-1/284, VIP Nagar, Rasipuram என்ற நிறுவனத்திற்கு 05.02.2020 முதல் 04.02.2021 வரை பராமரிக்கும் பணி மேற்கொள்ள ந.க.எண்.3535/2019/இ1, நாள்.05.02.2020–ன்படி உத்திரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட பணி ஆணை 04.02.2021 அன்றுவுடன் முடிவடைவதாலும், மேலும் மேற்கண்ட நிறுவன பராமரிப்பு பணி சரி வர செய்யாததாலும், பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளதால் மேற்கண்ட பராமரிப்பு பணியினை நகராட்சியே தனியார் ஒப்பந்தமின்றி நேரடியாக செய்ய ஆணையாளர் மற்றும் சட்டமன்ற உறப்பினர் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க இப்பணியினை நகராட்சியே செய்ய வேண்டியுள்ளதாலும், மேலும் மேற்கண்ட பணிக்கு போதிய பணியாளர்கள் நகராட்சியில் இல்லாதமையால் இப்பணிக்கு 5 Zone மற்றும் Ligfting Pumping Station ON/OFF பணி செய்ய 14 எண்ணம் பணியாளர்கள் (Mazdoor-I) தேவைப்படுவதால் 6 மாத காலத்திற்கு 14 பணியாளர்களை மட்டும் ஒப்பந்ததாரர்கள் மூலம் பணியமர்த்தி கொள்ள (Including ESI மற்றும் E.P.I)யுடன் கொள்ள P.W.D Schedule of Rate–ன்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.14.50 லட்சத்திற்கு பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ள நகர்மன்ற நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3771/2020/இ1 | **தீர்மானம் எண்.1307**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.** |
| பொருள் எண்..27 | இராமநாதபுரம் நகராட்சி, வார்டு எண்–25, அறிஞர் அண்ணா நடுநிலைப்பள்ளியில் Smart Class அமைத்தல் மற்றும் | **தீர்மானம் எண்.1308** |

| | | |
|---|---|---|
| | Table Chair வாங்கி கொடுக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.14.00 லட்சத்திற்கு கல்விநிதியின் கீழ் பணிமேற்கொள்ள நகர்மன்ற நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>__அலுவலக குறிப்பு__ – 1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)இப்பணி அவசர அவசிய கல்வி பணிஎன்பதினால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோருவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>ந.க.எண்.3698/2020/இ1 | **அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.** |
| பொருள் எண்..28 | இராமநாதபுரம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்திற்கு கீழ்க்கண்ட விபரப்படி வாகனங்கள் பயன்படுத்தப்படுகிறது.<br>1.Desilting Auto – 1 Nos<br>2.Zed Rodding Lorry - 2 Nos<br>3.Sullage Lorry - 1 Nos<br>4.Rabit Desilting Machine - 1 Nos<br><br>மேற்கண்ட வாகனங்கள் தனியார் UGD ஆண்டு பராமரிப்பு பணி ஒப்பந்ததாரரின் பணியாளர்கள் மூலம் பராமரிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட UGD ஒப்பந்ததாரர் பணி ஆணை 04.02.2021 அன்றுவுடன் முடிவடைவதாலும், மற்றும் பாதாள சாக்கடை பராமரிப்பு பணி நகராட்சி மூலம் 05.02.2021 முதல் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் கீழ்க்கண்ட விபரப்படி பணியாளர்கள் தேவைப்படுகிறது.<br>1) \| Desilting Auto (With Driver) \| 3 Nos | **தீர்மானம் எண்.1309**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.** |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2)</td><td>Robert Desilting Meachine (With LCV Driver)</td><td>4 Nos</td></tr>
<tr><td>3)</td><td>Jed Rodding (I With out Driver)</td><td>3 Nos</td></tr>
<tr><td>4)</td><td>Jed Rodding (II With out Driver)</td><td>3 Nos</td></tr>
<tr><td>5)</td><td>Sullage Lorry(With out Driver)</td><td>2 Nos</td></tr>
</table>
எனவே நமது பாதாள சாக்கடை பணியினை நகராட்சி மூலம் பணிமேற்கொள்ள 15 எண்ணம் பணியாளர்களை (Mazdoor-I) ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்தி கொள்ள (Including ESI மற்றும் EPI) வுடன் PWD Schedule–ன்படி ரூ.15.50 லட்சத்திற்கு பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் பணிமேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3714/2020/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..29</td>
<td>
இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் நிதி 2020–2021, நகர் பகுதியில் உள்ள காட்டுபிள்ளையார் கோவில் தெரு (வார்டு–8), மதுரையார் தெரு (வார்டு–9), மோர்க்கடைத் தெரு (வார்டு–13), முத்துராமலிங்கசுவாமி கோவில் தெரு (வார்டு–12), புளிக்காரத் தெரு (வார்டு–21) ஆகிய இடங்களில் புதியதாக பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.4.80/– லட்சத்திற்கு 31.12.2020–ம் தேதி அன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.
<table>
<tr><td></td><td></td><td>மதிப்பீட்டு தொகை</td><td>வழங்கியுள்ள விலை</td></tr>
</table>
</td>
<td>தீர்மானம் எண்.1310<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>வ.எண்.</td><td>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள்</td><td>(ரூ)<br>(இலட்சத்தில்)</td><td>விகிதம்<br>கூடுதல்/குறைவு<br>(ரூ)</td></tr>
<tr><td>1.</td><td>திரு.கே.சத்தியநாதன்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம்.</td><td>4,80,000/–</td><td>0.20 % சதவிகிதம்<br>மதிப்பீட்டை விட<br>குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.ஆர்.சரவணன்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம்</td><td>4,80,000/–</td><td>0,75 % சதவிகிதம்<br>மதிப்பீட்டை விட<br>அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிதாரர்களில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்தபுள்ளிதாரர் “திரு.கே.சத்தியநாதன், இராமநாதபுரம், அவர்களது 0.20% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு–</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.3678/2020/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..30</td>
<td>இராமநாதபுரம் நகராட்சி, அலுவலக ஈப்பு வாகனம் TN65-H–0315க்கு (கம்பில்ட் டிங்கரிங், முகப்பு மக்காட்டு, வாட்டர் சர்வீஸ்) மற்றும் இதர பழுதுநீக்கம் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.59,000/–த்திற்கு மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு– 1.</u>மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2.இப்பணி அலுவலக வாகனப் பணியாதலால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று விலைப்புள்ளி கோருவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>
ந.க.எண்.3733/2020/இ1</td>
<td>தீர்மானம் எண்.1311<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | | |
| பொருள் எண்..31 | இராமநாதபுரம் நகராட்சி, வார்டு எண்–28, வனசங்கரி அம்மன் கோவில் தெருவில் உள்ள பொது கழிப்பிடத்தினை பொது சுகாதாரப் பிரிவிற்கு வார்டு அலுவலகமாக மாற்றும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.50 லட்சம் நகராட்சி வருவாய் நிதியின்கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு– 1.**மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)இப்பணி பொது சுகாதார பணியாதலால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>ந.க.எண்.3755/2020/இ1 | **தீர்மானம் எண்.1312**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.** |
| பொருள் எண்..32 | இராமநாதபுரம் நகராட்சி, அலுவலக ஈப்பு வாகனம் TN65-H–0315 வாகனத்திற்கு பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள ரூ.0.59/– லட்சத்திற்கு 28.12.2020ம் தேதி அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. | **தீர்மானம் எண்.1313**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.** |

| வ.எண் | வரப்பெற்ற விலைப்புள்ளிதாரர்களின் பெயர்கள் | வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|
| 1. | M/s.N.S.Auto Electrical Works,<br>No.202-3A, Peravoor Village,<br>Devipattinam-Via, Ramanathapuram. | **58,812.80/–** |
| 2. | M/s.Sri Vignesh Engineering Works,<br>Near-Magar Nombu Teddal. | **63,382.40/–** |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>Kenikkarai,Ramanathapuram.</td><td></td></tr>
<tr><td>3.</td><td>M/s.A.R.Engineering Works.<br>No.16-7C,A.K.S.Complex,<br>Near-B-1 Police Station, G.H.Road,Ramanathapuram</td><td>67,704.20/–</td></tr>
</table>
<br>
மேற்கண்ட வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் விலைப்புள்ளி வழங்கியுள்ள விலைப்புள்ளிதாரான M/s.N.S.Auto Electrical Works, No.202/3A, Peravoor Village, Devipattinam(Via), Ramanathapuram அவர்களது குறைந்த விலை விகிதத்தினை ஏற்று மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு–</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.3733/2020/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..33</td>
<td>இராமநாதபுரம் நகராட்சி பாதாள சாக்கடை திட்டம் Zone –II சிங்காரத் தோப்பு, பாதாள சாக்கடை Zone-III காட்டு பிள்ளையார் கோவில் பாதாள சாக்கடை கழிவுநீர் வெளியேற்றும் நிலையங்களில் இயங்கி வந்த மின்மோட்டார்கள் 25HP மற்றும் 20HP பழுது ஏற்பட்டு மீண்டும் பழுதுபார்த்து இயக்க இயலாத நிலையில் திறன் குறைந்து உள்ளதால் சிங்காரத் தோப்பு, கோட்டை மேடு தெரு, சின்னச்சாமி தெரு, காட்டுபிள்ளையார் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக கழிவுநீர் வெளியேறி சுகாதாரக் கேடு ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி பழைய மின் மோட்டார்களுக்கு பதிலாக புதிய மின் மோட்டார் 25HP மற்றும் 20HP Non-Clog Submercible Motor வாங்குவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.19.00 லட்சத்திற்கு பாதாள சாக்கடை நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u>–1) மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மானம் எண்.1314<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | 2)இப்பணி பாதாள சாக்கடை திட்டப்பணி ஆதலால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று கோருவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>ந.க.எண்.3721/2020/இ1 | |
| பொருள் எண்..34 | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19775/ஜே2/2019–3, நாள்.15.12.2020–ல் தெரிவித்துள்ளபடி 2018–ம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (ஐந்தாவது திருத்தம்) மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 அட்டவணை V–ல் முடிதிருத்தும் நிலையங்கள், அழகு நிலையம், ஸ்பா மற்றும் மசாஜ் நிலையங்களுக்கு தொழில் உரிமையாணை கட்டணம் நிர்ணயம் செய்து உரிமையாணை வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்கண்டுள்ளவாறு மேற்கண்ட நிறுவனங்களுக்கு தொழில் உரிமையாணைக் கட்டணம் நிர்ணயம் செய்யப்படுகிறது. (அட்டவணை கீழே)<br>மேற்கண்டவாறு தொழில் உரிமையாணைக் கட்டணம் நிர்ணயம் செய்த விபரத்தினை தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழில் வெளியிட்டு அதன் விபரத்தினை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டியுள்ளது.<br>எனவே அவசர அவசியம் கருதி மேற்கண்டவாறு நிறுவனங்களுக்கு தொழில் உரிமம் நிர்ணயம் செய்திடவும் அதன் | **தீர்மானம் எண்.1315**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.** |

| வ.எண் | தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டப்பிரிவு (அட்டவணை V) | உரிமையாணை கோரும் தொழில் | அளவு | உரிமையாணைக் காலம் | கட்டண விபரம் |
|---|---|---|---|---|---|
| 1. | 249 | முடிதிருத்தகம் | 1 இனம் | 1 வருடம் | 300 |
| 2. | 249 | ஸ்பா | 1 இனம் | 1 வருடம் | 1000 |
| 3. | 249 | மசாஜ் பார்லர் | 1 இனம் | 1 வருடம் | 1000 |
| 4. | 249 | அழகு நிலையம் | 1 இனம் | 1 வருடம் | 1000 |

| | | |
|---|---|---|
| | விபரத்தினை தினசரி நாளிதழில் வெளியிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>1)**மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)**விளம்பரத்திற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். | |
| பொருள் எண்..35 | இராமநாதபுரம் நகராட்சி லேத்தம்ஸ் பங்காள ரோட்டில் உள்ள 10.00 Lakhs Water Capacity Tank(OHT) அருகில் உள்ள Chlorination Plant 4 ஆண்டுகளுக்கு மேல் பராமரிக்கப்பட்டு வந்ததால் தற்சமயம் பழுதாகி பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனால் நகரில் உள்ள அனைத்து OHT Manual முறைப்படி Chlorination செய்ய வேண்டி உள்ளது.<br>எனவே மேற்கண்ட OHT அருகில்அமைந்துள்ள Chlorination Plant-ல் புதிய D Pump. Panal போன்ற பொருட்கள் மாற்றி பயன்படுத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.85 லட்சம் குடிநீர் நிதியின் கீழ் பணிமேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>–1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)**இப்பணி குடிநீர் பணியாதலால் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>ந.க.எண்.3722/2020/இ1 | **தீர்மானம் எண்.1316**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.** |
| பொருள் எண்..36 | இராமநாதபுரம் நகராட்சி, சட்டப்பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கையில் நகராட்சிக்கு சொந்தமான பூங்காக்கள் மற்றும் திறந்த வெளி இடங்களில் 120 சதுர மீட்டர் பரப்பளவிற்கு குறைவில்லாத இடத்தில் யோகா மையக் கட்டிடங்கள் கட்டவும், 100 சதுரமீட்டர் பரப்பளவிற்கு குறைவில்லாத இடங்களில் திறந்த வெளி உடற்பயிற்சி கூடங்கள் | **தீர்மானம் எண்.1317**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது ந.க.எண்.5060/2020/தி1, நாள்.03.12.2020–ன் கடிதத்தில் படி தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதன்படி இராமநாதபுரம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்–32, ராஜராஜேஸ்வரி பூங்கா (ஆர்.ஆர்.பூங்கா) வளாகத்தில் திறந்த வெளி உடற்பயிற்சி கூடம் அமைக்கவும், அதற்கான மதிப்பீடு ரூ.15.00 லட்சத்திற்கு திட்டப் பிரேரணை தயார் செய்து பணி மேற்கொள்ளவும், மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**–மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3503/2020/இ1 | |
| பொருள் எண்..37 | இராமநாதபுரம் நகராட்சிக்கு பாத்தியமான அரண்மனை சந்திப்பில் உள்ள கட்டண கழிப்பறை வசூல் செய்யும் உரிமத்திற்கு **2018–19** மற்றும் **2019–2020**ம் ஆண்டிற்கு ஆண்டு குத்தகை தொகைக்கு இரண்டு வரிவிதிப்பு எண் **135/16011** மற்றும் **135/BDo1/00055** விதிக்கப்பட்டு இருமுறை கேட்பு எழுப்பப்பட்டுள்ளது. எனவே **135/BDO1/00055** வரிவிதிப்பு எண்க்கு குத்தகை தொகை செலுத்தப்பட்டுள்ளது. எனவே **135/16011** வரிவிதிப்பு எண் ரத்து செய்ய மன்றத்தின் பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.1318**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.** |
| பொருள் எண்..38 | இராமநாதபுரம் நகராட்சி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது ந.க.எண்.3292/2020/UGSS–1, நாள்.15.09.2020ன் கடிதத்தில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அமைச்சர் அவர்களது, சட்டமன்ற நிதிநிலை அறிக்கை **2020–2021**ல் கூட்டத் தொடர் நாள்.16.03.2020–ல் ‘‘பாதாள சாக்கடைத் திட்டம் அமுல் படுத்தப்பட்ட | **தீர்மானம் எண்.1319**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | நகரங்களில், கழிவு நீர் அடைப்பு நீக்குவதற்கு 1 ரோபோட் (Robotic Sewer Cleaning Machine) வாங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதினை தொடர்ந்து, இராமநாதபுரம் நகராட்சிக்கு 1 ரோபோட் Machine பொது நிதியிலோ அல்லது சமூகபாதுகாப்பு நிதி (Corporate Social Responsibility Fund (CSR) நிதியிலோ வாங்கி கொள்ள அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது.<br>மேற்கண்ட (Robotic Sewer Cleaning Machine) வாங்கி கொள்ள அனுமதிக்கு உத்திரவிடப்பட்டதின் பொருட்டு, பாதாள சாக்கடை திட்டத்தில் ஏற்படும் அடைப்புகள் மற்றும் கழிவுகளை அகற்றுவதற்கு மனிதர்கள் பயன்படுத்துவதை தடை செய்யும் பொருட்டு Robotic இயந்திரம் எண்ணெய் மற்றும் எரிவாயு கழகத்தால் ரூ.36.16 லட்சம் மதிப்பீட்டில் இலவசமாக தன்னார்வ அடிப்படையில் இந்நகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்இயந்திரம் மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் இராமநாதபுரம் சட்ட மன்ற உறுப்பினர் அவர்களால் 16.12.2020–ம் தேதி துவக்கப்பட்டு இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலம்.<br>ந.க.எண்.3267/2020/இ1 | |

**தனி அலுவலர் மற்றும்**
**நகராட்சி ஆணையர்(பொ)**
**இராமநாதபுரம் நகராட்சி**